சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2025-ம் ஆண்டு மார்ச் திங்கள் 03-ம் நாள் திங்கள் கிழமை

இடைமனு எண்.1/2023

இன்

அசல் வழக்கு எண்.174/2021

....

தனிஸ்லாஸ் ...மனுதாரர்/வாதி

/எதிர்/

அமல்ராஜ் ...எதிர்மனுதாரர் /1-ம் பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 05.02.2025 வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.Bரமேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கே.சித்திரைச்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

அசல் வழக்கில் தாவா சொத்தின் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்யக்கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9-ன் கீழ் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

தாவா சொத்து ஆதியில் மிக்கேல் என்பவருக்கு பாத்தியமாகி இருந்த சொத்தை மனுதாரரின் சித்தப்பா குழந்தைச்சாமி என்பவர் மேற்படி மிக்கேல் என்பவரிடமிருந்து பதிவு செய்த பத்திரம் மூலம் சரியான பிரதிபிரயோசனத்திற்கு கடந்த 10.10.1974 அன்று கிரையம் பெற்றார். மேற்படி கிரையத்திற்கு பிறகு தாவா சொத்தை மனுதாரரின் சித்தப்பா யாருடைய இடையூறும் இன்றி அனுபவம் செய்து

வந்தார். தாவா சொத்தின் சர்வே எண்.456/4. தாவா சொத்திற்கு அடுத்து சேகரமாக மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.456/3 மற்றும் 456/2 சொத்துக்கள் உள்ளன. தாவா சொத்தையும் தாவா சொத்திற்கு சேகரமாக உள்ள சர்வே எண்களான 456/3 மற்றும் 456/2 சொத்துக்களையும் பிரித்து காண்பிக்க எவ்வித வரப்பும் இன்றி மனுதாரரும் அவரது சித்தப்பாவும் அனுபவம் செய்து வந்தனர். தாவா சொத்தையும் அதன் அருகில் உள்ள சேகரமான சொத்தையும் அனுபவம் செய்து வருவதை எதிர்மனுதாரரின் மூதாதையர்கள் யாரும் எவ்வித தடையும் செய்யவில்லை.

இந்நிலையில் மனுதாரரின் சித்தப்பா தாவா சொத்தினை மனுதாரருக்கு 02.09.2021 அன்று உயில் எழுதி வைத்தார். மேற்படியாரும் கடந்த 11.09.2021 அன்று இறந்த பிறகு உயில் அடிப்படையில் தாவா சொத்தினை அனுபவம் செய்து வந்தார். தாவா சொத்திற்கும் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 456/2 மற்றும் 456/3 சொத்துக்களுக்கும் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட கேணியில் இருந்து பைப் லைன் போட்டு கடலை விவசாயம் செய்து வருகிறார். தாவா சொத்தினை எதிர்மனுதாரர் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை. எனவே அசல் வழக்கில் தாவா சொத்தின் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் உரையின் சுருக்கம்-</u>**

வாதியின் சித்தப்பா கடந்த 11.09.2021-ம் ஆண்டு இறந்தார் என்பது ஒப்புக் கொள்ளப்படுகின்றது. தாவா சொத்தினை எதிர்மனுதாரர் அனுபவம் செய்து வருகிறார். தாவா சொத்திலுள்ள பைப் லைன் எதிர்மனுதாரரால் பொருத்தப் பட்டதாகும். தாவா சொத்தினை வாதி எந்த காலத்திலும் அனுபவம் செய்ததில்லை. தாவா சொத்திற்கும் வாதிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. தாவா மனுவானது அசல் வழக்கினை இழுத்தடிக்கவேண்டும் என்பதற்காக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் மனு எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

**5**. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6**. தாவா சொத்தினை மனுதாரருக்கு அவரது சித்தப்பா 02.09.2021 அன்று உயில் எழுதி வைத்ததாகவும், அவர் 11.09.2021 அன்று இறந்த பிறகு உயில் அடிப்படையில் மனுதாரர் தாவா சொத்தினை அனுபவம் செய்து வந்ததாகவும், தாவா சொத்தினை எதிர்மனுதாரர் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை எனவும், எனவே தாவா சொத்தின் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்ய வேண்டி மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. அதனை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்தினை எதிர்மனுதாரர் அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்தினை வாதி எந்த காலத்திலும் அனுபவம் செய்ததில்லை எனவும் தாவா சொத்திற்கும் மனுதாரருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை எனவும், அசல் வழக்கினை இழுத்தடிக்கவேண்டும் என்பதற்காக மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**7**. தாவா வழக்கானது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பினரும் தாவா சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என இந்த மனுவில் தெரிவித்துள்ளனர். ஆனால் அதன் உண்மை தன்மையை அசல் வழக்கில் தான் தீர்வு காண இயலும். தாவா சொத்தினை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யும் பட்சத்தில் அது இருதரப்பினருக்கும் உதவிகரமாகவும் நீதிமன்றத்திற்கு வழக்கு பிரச்சனையை தீர்ப்பதற்கும் உதவிகரமாக இருக்கும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே தாவா சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

முடிவாக இந்த மனு அனுமதிக்கப்பட்டு திருமதி. வெற்றிச்செல்வி வழக்கறிஞர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டும் அவருக்கான ஊதியம் ரூ. 5000/- நிர்ணயம் செய்து அதை மனுதாரர் நேரடியாக நீதிமன்ற ஆணையரிடம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும், நீதிமன்ற ஆணையர் தகுதி வாய்ந்த சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தினை நீதிமன்ற

ஆணையர் ஒரு மாத காலத்திற்குள் தல விசாரணை செய்து அதன் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய அறிவுறுத்தப்படுகிறது. அடுத்த கட்ட விசாரணை 04.04.2025.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025ம் ஆண்டு மார்ச் திங்கள் 03-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.03.03 17:32:27 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.03.03 17:32:35 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court
Sivagangai
I.A.No.1/2023
in
O.S.No.174/2021
in
**Draft/Fair/Order**
03.03.2025